உயிரிழந்தவர்கள் இளம் வயதினர்கள் என்பதைக் கணக்கில் எடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நிவாரண நிதியில் இருந்து ரூ.1 இலட்சம் என்பதை அதிகரித்து வழங்கவும், மருத்துவமனையில் இருப்பவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டுமாயும் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியவாறு, குமரி மாவட்டத்தில், திருவட்டாறு தொகுதியில் 7–4–2008 அன்று இடி, மின்னலோடு பெய்த பெருமழையில், இடி தாக்கி இருவர் உயிரிழந்து, மூவர் மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டுள்ளார்கள். உயிரிழந்த இருவருடைய குடும்பத்திற்கும், தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் குடும்ப நிதி வழங்கப்படும் என்பதையும், இடி தாக்கி காயமுற்றுள்ள, மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டுள்ள மூவருக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர் நேரடிப் பார்வையில் உரிய சிகிச்சைகள் அளித்து, அந்தச் சிகிச்சைக்குத் தேவைப்படுகிற தொகை, நிதியையும் அரசின் சார்பாக வழங்குவார் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் திருமதி லீமா றோஸ் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ்.

திருமதி ரா. லீமா றோஸ்: நிவாரண நிதியை அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

(ஆ) பேரவையில் ஏற்பட்ட மின் தடை

திரு. சி. ஞானசேகரன்: Speaker Sir, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஞானசேகரன், என்ன விஷயம்? (குறுக்கீடு) சொல்லிவிடுங்கள், சொல்லிவிடுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிட்டேன், ஒரேயொரு நிமிடம். 10–24 மணிக்கு இந்த அவையிலே திடீரென்று மின் வெட்டு ஏற்பட்டு கடிகாரங்கள் எல்லாம் Light off ஆகியிருக்கின்றன. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சருக்கு இது தெரியுமா? ஏன் இந்த மின்வெட்டு ஏற்பட்டிருக்கிறது? அவைக்கு அவர் விளக்குவாரா?